# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | பரத நாட்டியம் - I,II | பாட எண் : 45 T I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

01. 1. பஞ்சகிருத்திய ஆனந்த தாண்டவத்திற்குரிய இறைவன்
1. பிள்ளையார் 2. முருகன் 3. சிவன் 4. பார்வதி

02. கண்டிகைகளாக வகுக்கப்பட்ட உருப்படி.
1. அலாரிப்பு 2. சப்தம் 3. வர்ணம் 4. ஜாவளி

03. வீட்டுப் பாவனைப் பொருட்களை ஏந்தியாடும் கிராமிய நடனம்.
1. ஏந்தல் நடனம் 2. கொழுந்து நடனம் 3. மீனவ நடனம் 4. வேடுவ நடனம்

04. நீர் கற்ற சப்தத்தின் தாளம் யாது?
1. ரூபகம் 2. ஜம்பை 3. ஆதி 4. மிஸ்ரசாபு

05. ரௌத்திர ரஸத்தின் கடவுள் யார்?
1. பிரம்மா 2. உருத்திரன் 3. யமன் 4. விஷ்ணு

06. ஓடிசி நடனத்தின் நடன நிலை யாது?
1. திரிபங்கநிலை 2. அதிபங்கநிலை 3. சமநிலை 4. அரைமண்டி

07. ஐரோப்பிய நாட்டவரான ஸ்டாடிபேரியன் என்பவரால் உருவாக்கிய நரம்புக்கருவி எது?
1. வீணை 2. கிற்றார் 3. தம்புரா 4. வயலின்

08. 1932 ஆம் ஆண்டு சங்கீத கலாநிதி என்ற பட்டத்தைப் பெற்ற வாக்கேயக்காரர்,
1. சின்னையா 2. க.பொன்னையா 3. முத்துசுவாமி தீட்சிதர் 4. பாவநாசம் சிவம்.

09. பச்சைமணி, பவளமணி, போன்றவற்றால் தம்மை அலங்கரித்து ஆடும் தொழில்சார் நடனம்.
1. அரிவுவெட்டு 2. வேடுவர் நடனம் 3. குறவன் குறத்தி 4. வாள்நடனம்

10. கோர்வை அமைக்கும் போது இறுதியில் வரும் அடவு.
1. தத் தெய் தாம் 2. கிடதக தரிகிடதொம் 3. தாஹத்த ஜெம்தரி தா 4. தா தெய் தெய்த

11. பஞ்சபாணத்தில் காமநினைவுகளை உண்டாக்கும் மலர்,
1. முல்லை 2. அசோகம் 3. நீலோற்பலம் 4. தாமரை

12. நீர்கலந்த பாலில் நீரைப் பிரித்து பாலைமட்டும் உட்கொள்ளும் அன்னப்பட்சியை உதாரணமாக கொள்ளும் இலட்சணம்.
1. சிஸ்ய லட்சணம் 2. குரு லட்சணம் 3. பாத்திர இலட்சணம் 4. அபாத்திர இலட்சணம்.

13. இராவணன், சிசுபாலன், கம்சன் ஆகிய அரக்கர்களைக் குறிக்கப் பயன்படுத்தும் வேஷம்,
1. கத்தி 2. கரி 3. பச்சை 4. தாடி

14. ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் உருப்படி யாது?
1. அலாரிப்பு 2. ஜதீஸ்வரம் 3. கௌத்துவம் 4. சப்தம்.

15. சங்கமருவிய காலத்தில் ஆடற்கலையின் மகுடமாக எழுதப்பட்ட நூல் எது?
1. கம்பராமாயணம் 2. மகாபாரதம் 3. சிலப்பதிகாரம் 4. திருக்குறள்

16. ஒரு தாய் தன்னுடைய சேயிடம் எவ்வாறு அன்பு காட்ட வேண்டும் என்ற மனநிலையைச் சித்திரிக்கும் பாவம்.
1. அனுபாவம் 2. விபாவம் 3. சஞ்சாரிபாவம் 4. வாத்சல்யபாவம்

17. வழியில் பாம்பைக் காணும்போது வெளிப்படுத்தப்படும் ரஸம்.
1. சிரிப்பு 2. பயம் 3. வெறுப்பு 4. கோபம்

18. தரித, தகஜொனு தாம்: : என்பதன் மொத்த அட்சர எண்ணிக்கை.
1. 18 2. 16 3. 14 4. 12

19. பாம்பும் தேளுமாய் உருக்கொண்டு வந்த அவுணரை துர்க்கை மரக்காலால் மிதித்து ஆடிய கூத்து எது?
1. பேடிக்கூத்து 2. துடிக்கூத்து 3. அல்லியம் 4. மரக்கால் கூத்து

20. தெய்வீக ஆடற்கலை எனும் நூலை எழுதியவர்.
1. வழுவூர்ராமையாப்பிள்ளை 2. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
3. க.பொன்னையாப்பிள்ளை 4. கோபாலகிருஸ்ணபாரதியார்.

21. சுந்தரி எனும் கிரிவா பேதத்தினை எடுத்துக்கொள்ளும் நாட்டிய உருப்படி,
1. அஷ்டபதி 2. ஜாவளி 3. அலாரிப்பு 4. சுலோகம்

22. " ஆலிங்கனேச்ச" என்பதனைப் பிரயோகிக்கப் பயன்படும் ஹஸ்தம்,
1. சிவலிங்கம் 2. உத்சங்கம் 3. கடகாவர்த்தனம் 4. சங்கு

23. முதலில் இடது கால்தட்டு ஆரம்பிக்கும் அடவு?
1. தட்டடவு 2. தெய்தெய்தாம் 3. குத்தடவு 4. தட்டுமெட்டடவு

24. பாரம் குறைந்த பூமுடி அணிந்து ஆடப்படும் கூத்து,

1. வடமோடி 2. வடபாங்கு 3. தென்பாங்கு 4. தென்மோடி

25. பரதநாட்டியத்திற்குப் பயன்படுத்தும் கஞ்சற்கருவி.
1. மிருதங்கம் 2. நட்டுவாங்கதாளம் 3. சேமக்கலம் 4. வீணை

26. நாட்டியப் பெண்ணிற்கு இருக்கவேண்டிய 10 குணங்கள்.
1. பாத்திர பகிப்பிராணன் 2. அபாத்திரலக்ஷணம்
3. பாத்திர அந்தப் பிராணன் 4. பாத்திரலக்ஷணம்.



LMDUnit

27. திஸ்ரமும் சதுஸ்ரமும் சேர்ந்து உருவாகும் நடை,
1. கண்டம் 2. சங்கீரணம் 3.திஸ்ரம் 4. மிஸ்ரம்

28. உலக இயல்புக்குச் சற்று அப்பாற்பட்டு கலை வடிவத்திற்கு முதலிடம் அளிக்கும் நடாக வழக்கு,
1. நாட்டிய தர்மி 2. லோகதர்மி 3. அரங்கதேவதாஸ்துதி 4. புஸ்பாஞ்சலி

29. பக்தபிரகலாதன் எனும் சரித்திர கதையை மையமாககொண்ட அவதாரம்,
1. கல்கி 2. வாமணன் 3. கூர்மம் 4. நரசிம்மன்

30. திருவாட்டி, பூவரசு போன்ற மரங்களால் கழி செய்யப்பட்டு அதனைப் பயன்படுத்தி வாசிக்கும் வாத்தியம்
1. உடுக்கு 2. மிருதங்கம் 3. தவில் 4. பறை

31. பத்மா சுப்பிரமணியத்தின் தலைமையில் ஆயிரம் நடனக்கலைஞர்கள் கலந்துகொண்டு நடன நிகழ்வு இடம் பெற்ற ஆலயம்.
1. மதுரை மீனாட்சி 2. தஞ்சைப்பெருங்கோயில்
3. திருப்பதி 4. காஞ்சிகைலாசநாதன்

32. பாசம், மிருகசீர்சம் முத்திரைகளைப் பிரயோகிக்கும் பாந்தவ்ய ஹஸ்தம்,
1. சக்களத்தி 2. மைத்துனி 3. மாமியார் 4. கணவன்

33. தளாங்கு தொம் எனும் சொற்கட்டைப் பயன்படுத்தும் பாதபேதம்.
1. சமபாதம் 2. பிரம்மரி 3. உத்பிளவனம் 4. பாதசாரிகா

34. "தெய் திதி தெய்" இதனை மிருதங்க சொற்கட்டில் குறிப்பிட்டால்.
1. தக ததிங்கிண தொம் 2. கிண தொம்
3. தகதிகு ததிங்கிண தொம் 4. ததிங்கிண தொம்

35. பீபத்ஸ ரசத்தின் எதிர் ரஸம் யாது?
1. வீரம் 2. சிருங்காரம் 3. அற்புதம் 4. கருணை

**36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு படங்களைப் பார்வையிட்டு விடைகளைத் தெரிவு செய்க.**

36. இராஜவாத்தியம் என அழைக்கப்படும் இசைக்கருவி
1. மிருதங்கம் 2. தம்பட்டம்
3. தவில் 4. உடுக்கு



37. பரதநாட்டிய உருப்படிகளைக் கச்சேரி அமைப்புக்கு ஏற்றவகையில் அமைத்தவர்.
1. வழுவூர்ராமையாப்பிள்ளை 2. சு.பொன்னையாப்பிள்ளை
3. மீனாட்சிசுந்தரம்பிள்ளை 4. வடிவேலு



38. நடனமாது குருவின் ஆசியுடன் தனது கைகளினால் அணியவேண்டிய அணிகலன்
1. சலங்கை 2. ஒட்டியானம்
3. வங்கி 4. அட்டியல்



39. பரதநாட்டியத்தின் கடவுள் எனப் போற்றப்படுபவர்.
1. முருகன் 2. வைரவர்
3. நடராஜர் 4. கணபதி



40. படத்தில் குறிப்பிடப்படும் இந்திய சாஸ்திரிய நடனம்.
1. பரதம் 2. குச்சுப்புடி
3. கதகளி 4. கதக்



(40 x 1= 40 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி – II

- பகுதி **II** இன் முதலாம் வினா கட்டாயமானது
- ஏனையவற்றிலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01. 1. அழகிற்காக மெய்யடவு சேர்க்கப்படும் உருப்படி எது?
2. காத்தல் (துன்பம்) தொழில் ஆடப்படும் தாண்டவம் எது?
3. மன்னரும் கற்றறிந்தோரும் உள்ள சபையில் ஆடப்படும் நடனம் எது?
4. "வாலிபப் பருவத்தில் என்னை அணுகாது வலுவிழந்த பருவத்தில் தன்னை அணுகி உயிரை வாங்குகிறார்களே" எனக் கூறியவர் யார்?
5. சங்கீத அளவுகோல் என அழைக்கப்படும் நரம்புக் கருவி?
6. தாம்பாள விளிம்பில் நின்று ஆடும் சாஸ்திரிய நடனம்?
7. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் காணப்பட்ட காலம் எது?
8. ததிங்கிணதொம் என்பதன் நாட்டியச் சொற்கட்டு யாது?
9. உடுக்கின் வகைகள் இரண்டு தருக.
10. தாளத்தின் இரு ஓசைகளும் எவை?

(12 புள்ளிகள்)

02. 1. நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் இராகம், தாளம் யாது? (2 புள்ளிகள்)
2. ஜதீஸ்வரத்தின் இலட்சணத்தினைத் தருக. (3 புள்ளிகள்)
3. ஜதீஸ்வரத்தின் 2 வது கோர்வையின் சொற்கட்டினை அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (7 புள்ளிகள்)

03. பின்வரும் முத்திரைகளிற்குரிய விநியோகங்களைக் கருத்துடன் தருக.
1. முஸ்டி  2. பிரளம்பம்  3. கற்கடகம்  4. கடகாவர்த்தனம்

(3 x 4 = 12 புள்ளிகள்)

04. 1. 7 தாளங்கள் 35 தாளங்களாக மாறுவதற்கான பிரதான காரணம் யாது? (1 புள்ளி)
2. சப்த தாளங்களையும் அவற்றின் குறியீடுகளையும் தருக. (2 புள்ளிகள்)
3. மட்டியதாளம், ஜம்பை தாளம் ஜாதிபேதம் அடையும் முறையினை அட்டவணைப்படுத்துக. (9 புள்ளிகள்)

05. 1. தொழில்சார் நடனங்கள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. மலைவளம், நாட்டுவளம், என்பவற்றை மையமாக வைத்து ஆடப்படும் கிராமிய நடனம் எது? (2 புள்ளிகள்)
3. நீர் குறிப்பிட்ட கிராமிய நடனத்தைப் பின்வரும் விடயங்களை மையமாக வைத்து விளக்குக.
   - ஆடை ஆபரணம்.
   - இசைக் கருவிகள்
   - ஆடலில் உள்ளடக்கப்படும் வாழ்க்கைப் பண்புகள்.
   - பொருத்தமான பாடலின் 2 வரிகள். (8 புள்ளிகள்)

06. 1. இசையியல் எனும் நூலினை இயற்றிய ஆசிரியர் யார்? (2 புள்ளிகள்)
2. இவ்வாக்கேயக்காரரின் பெற்றோர், பிறப்பு, கலைத்தொண்டு, இயற்றிய உருப்படிகள் ஆகியவற்றை உள்ளடக்கி வாழ்க்கை வரலாற்றினை விளக்குக. (10 பள்ளிகள்)

07. நீர் பார்வையிட்ட பரதநாட்டிய நிகழ்ச்சிகளின் அமைப்பு முறை, வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, உடை, ஒப்பனை, நட்டுவாங்கம் என்பவற்றில் இரசித்தவற்றை விமர்சிக்குக. (12 புள்ளிகள்)